<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

<u>**S.C. No.217/2022**</u>

அ.சா.4 தேதி.12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமகிருஷ்ணன் | த/பெ. | ராமச்சந்திரன் |
| வயது | 45 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1, 3, 5,எதிரிகள் ஆஜர் இல்லை. அவருக்கு பா.ச.ந.ச சட்ட பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது2.4 எதிரிகள் Spilit up செய்ப்பட்டுள்ளார்கள்).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் தற்போது ராதாநல்லூரில் வசித்து வருகிறேன். கடந்த 14.04.2016 அன்று மதியம் 03.45 மணியளவில் ராதாநல்லூர் மன்மதன் கோவில் தெருவில் கும்பலாக நின்று திருடன் திருடன் என்று சத்தம் போட்டுக்கொண்டு விரட்டிக்கொண்டு வந்தார்கள். அப்போது எனக்கு எதிரே வாகனம் எண் இல்லாத கருப்பு நிற பல்சர் வாகனத்தில் வந்த இருவரை நான் எதிரே சென்று தடுத்து நிறுத்தினேன். அப்போது பல்சர் வாகனத்தின் பின் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த நபர் என்னை அரிவாளால் வெட்டினார். அதில் எனது இடது மணிக்கட்டு அருகில் வெட்டு விழுந்தது. பின்பு அவருடன் மணல்குவாரியில் எங்கள் ராதாநல்லூர் மேலத்தெருவில் கேஷியராக பணிபுரிந்து வந்தவரிடமிருந்து பணப்பையினை அபகரித்துக்கொண்டு வந்தார்கள் என்று நான் பின்னர் தெரிந்துகொண்டேன். அந்த பணப்பையில் எவ்வளவு தொகை இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. பின்னர் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மயிலாடுதுறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எனது சகோதரர் சுரேஷ் கொண்டு வந்து சேர்த்தார். நான் சிகிச்சையில் இருந்தபோது மணல்மேடு போலீசார் என்னை நேரில் வந்து விசாரணை செய்தார். அவரிடம் நடந்த விபரத்தினை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

நான் நீதிமன்றத்தில் கூறிய விபரத்தினை ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோதும் கூறினேன் என்றால் சரிதான். நான் புகார் எதுவும் தனியாக

கொடுக்கவில்லை. கூட்டமாக எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் கூட்டமாக வந்தார்கள். பல்சர் வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள். அடையாளம் காட்டக்கூறி போலீசார் என்னை அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. போலீசார் எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளதற்கு ஆதரவாக எனக்கு வேறு வகையில் ஏற்பட்ட காயத்தினை மறைத்து வழக்கிற்கு ஆதரவாக என்னை வரச்சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

**<u>S.C. No.217/2022</u>**

அ.சா.5 தேதி.12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | த/பெ. | ராமச்சந்திரன் |
| வயது | 43 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1, 3, 5,எதிரிகள் ஆஜர் இல்லை. அவருக்கு பா.ச.ந.ச சட்ட பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது2.4 எதிரிகள் Spilit up செய்ப்பட்டுள்ளார்கள்).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் தற்போது ராதாநல்லூர் நடுத்தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் எலக்ரீசியன் வேலை பார்த்து வருகிறேன். மணல்மேடு மண்குவாரியில் கேஷியராக வேலை செய்பவர் என் தெருவின் பக்கத்தில் குடியிருந்து வருகிறார். கடந்த 14.04.2016 அன்று மதியம் 03.45 மணியளவில் எனது அண்ணன் ராமகிருஷ்ணன் மதியம் சாப்பிட்டுவிட்டு மன்மதன் கோவில் அருகில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது மணல்குமாரியில் கேஷியராக வேலை செய்து வந்தவர் பணத்தினை வசூல் செய்து எடுத்துக்கொண்டு வந்தவர்களை வழியில் வாகனத்தினை மறிதது பணப்பையினை அபகரித்து கொண்டுவந்தவர்களை எனது சகோதரர் ராமகிருஷ்ணன் தடுத்ததினால் எனது சகோதரின் இடது கை மணிக்கட்டில் அரிவாளால் வெட்டிவிட்டு இருசக்கர வாகனத்தில் ஏறி தப்பி சென்றதாகவும், எனது சகோதரர் என்னிடம் கூறினார். அதன் பின்னர் நான் தான் எனது சகோதரரை மருத்துவ மனைக்கு அழைத்துச்சென்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கையில் நடந்ததை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

நான் வயலில் இருந்தபோது சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தது. மேற்கண்ட விபரத்தினை போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.